**<u>2021ம் ஆண்டு மே மாதம் 31ம்தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற இயல்பு கூட்ட பொருள்</u>**

**1.** திண்டுக்கல் மாநகராட்சியில் வசிக்கும் பொதுமக்களுக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் பராமரிக்கப்பட்டு தினசரி திண்டுக்கல் மாநகருக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் அளவு **8.50 MLD** ஆகும். இதன் தலைமை பணியிடம் கரூர் காவேரி ஆறு ஆகும்.

மேற்கண்ட தலைமை பணியிடத்தில் கூடுதல் தண்ணீர் பெற அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி அரசினரிடமிருந்து பெறுவதற்கு, ஆக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் தனது ந.க.எண்.9200/2021/ws.2, நாள்.27.04.2021ஆம் தேதியிட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.82.47** கோடியில், திண்டுக்கல் மாநகராட்சியின் பங்கீடு தொகை **ரூ.37.47** கோடியினை மத்திய நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் (CGF) பெறுவதற்கு, மாமன்ற அனுமதி பெற்று அறிக்கை சமர்ப்பிக்குமாறு வரப்பெற்ற கடிதத்தின் மாமன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. (ந.க.எண்.5826/2021/இ2)

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திண்டுக்கல் மாநகராட்சி பங்கீடு தொகை ரூ. 37.47 கோடியினை மத்திய நிதிக்குழு மான்யம் ஆக பெறுவதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேல் அதிகாரிகளின் ஆலோசனைப்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர்க்கு அறிக்கை சமர்ப்பிக்கவும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

---

**2.** இம்மாநகராட்சியின் 48 வார்டுகளிலும் உருவாகும் குப்பைகள் இரண்டாம் நிலை சேகரிப்பு மூலம் முருக பவனம் கலவை உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வரப்படுகிறது. இந்நிலை சுமார் 60 ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்று வருவதால், சேகரமாகியுள்ள குப்பைகளின் அளவு தரை மட்டத்திலிருந்து சுமார் 3 மீட்டர் உயரமாக உள்ளது. எனவே குப்பை லாரிகள் உரக்கிடங்கின் உள்ளே சென்று குப்பையினை கொட்டுதல் மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் வண்டிகள் ஈர கழிவு / சேறுகள் / குப்பைகளில் மாட்டிக்கொண்டு எடுத்திட இயலாத நிலையிலும், இயக்குவதற்கு கடினமாகவும் சிரமமாகவும் உள்ளது. எனவே செயின்டோசர் இயந்திரம் மூலம் குப்பைகளை உள்ளே தள்ளினால் மட்டுமே அன்றாடம் நகரில் உருவாகும் 92 மெட்ரிக் டன் குப்பைகளை கொட்ட இயலும். எனவே

அரசு துறையான வேளாண்மை பொறியியல் துறைக்குச் சொந்தமான செயின்டோசர் வாகனத்தினை சுமார் 500 மணி நேரத்திற்கு (வாடகை அடிப்படையில்) இவ்வலுவலக உத்திரவு ந.க.எண்.14285/2015/எச்2 நாள் 08.05.2020ன்படி பணி மேற்கொள்ளப்பட்டு கடந்த **17.05.2021** வரை 476 மணிநேரம் செயின்டோசர் பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதம் 24 மணி நேரம் உள்ளது. மேலும், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும், குப்பைகளை எரித்து அழிப்பதற்கான கட்டுமான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதால் அவ்வாறு சேகரமாகும் குப்பைகளையும் பழனி ரோடு உரக்கிடங்கல் சேகரம் செய்யும் பணியை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் மேற்படி உரக்கிடங்கில் அன்றாடம் சேகரித்து வரப்பெறும் குப்பைகளை செயின்டோசர் வாகனம் மூலம் தினந்தோறும் உடனுக்குடன் தள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணிக்காக செயின்டோசர் வாகனம் கூடுதலாக 500 மணி நேரத்திற்கு பயன்படுத்திக்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.4,20,000/-க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது (**ந.க.எண்.14285/2015/எச்1**).

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. உத்தேச செலவினம் ரூ.4,20,000/-ஐ மாநகராட்சி வருவாய் மூலதன நிதியில் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணி மேற்கொண்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

---

**3.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8009/2016/ஜே-1 நாள் 04.11.2016 மற்றும் 28.06.2017, 29.08.2019 ஆகிய தேதிகளில் நடைபெற்ற ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின் படியும், அரசு தலைமைச் செயலர், சென்னை அவர்களின் அனைத்து துறை கூட்ட அறிக்கை நாள் 14.03.2019, மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.141/2018/அ6 நாள் 05.04.2019 ஆகியவற்றில் இம்மாநகராட்சி பகுதிகளில் கொசுவினால் பரவக்கூடிய நோய்களை தடுக்கும் பணிகளுக்கு 48 வார்டுகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 300 வீடுகளுக்கு 1 நபர் என்ற வீதத்தில் (இம்மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகையான 2,07,307க்கு (2011 சென்சஸ்) உட்பட 54000 குடியிருப்புகளுக்கு மேல் உள்ளதால் 173 நபர்கள் தேவைப்படுகிறது. எனவே, 173 தற்காலிக மலேரியா களப்பணியாளர்களை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2018-19ம் ஆண்டு தரவிலைப் பட்டியலின்படி நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 296/- என்ற விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் , திரு. ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம், திண்டுக்கல் என்பவர் மூலமாக பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணி ஒப்பந்த காலம் 21.04.2021 உடன் முடிவுறும் நிலையில் உள்ளதாலும், டெங்கு கொசு ஒழிப்பு பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாலும், 100 முதல் 110 வரையான களப்பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்தி பணி

மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதாலும் தேர்தல் நன்னடைத்தை விதி அமுலில் உள்ளதால், மேற்படி பணியின் அவசியம் கருதி பணிக் காலத்தினை 22.04.2021 முதல் 21.06.2021 வரை மேலும் 2 மாத காலத்திற்கு ஏற்கனவே ஒப்பந்த பணி மேற்கொள்ளப்படடு வரும் திரு.ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம், திண்டுக்கல் ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு செய்து கொள்ளவும் , அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.20,00,000/-(ரூபாய் இருபது இலட்சம்)ஐ இம்மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.7983/2019/எச்2)

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2)தேர்தல் நன்னடத்தை விதி அமலில் உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி இப்பணியின் அவசியம் கருதியும் மேற்படி பணிக்காலத்தினை மேலும் 2 மாத காலத்திற்கு (22.04.2021 முதல் 21.06.2021) ஏற்கனவே இப்பணியினை செய்து வரும் திரு.ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம் ஒப்பந்ததாரருக்கு பணி மேற்கொள்ள நீட்டிப்பு செய்து பணி மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம் .

---

**4.** திண்டுக்கல் மாநகராட்சியின் பிரதான குடிநீர் ஆதாரமான ஆத்தூர் காமராஜர் சாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 90 எச்.பி மற்றும் 120 எச்.பி பம்ப்செட் மற்றும் பேனல்போர்டு பழுது நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,45,000/- ஆகும். இப் பணியினை, திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ராஜ்குமார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், மதுரை மூலம் மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(**ந.க.எண்.11658 / 2019 / இ 4**)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்
2) இப் பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கான செலவுத் தொகை ரூ.3,45,000/- னை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ராஜ்குமார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், மதுரை மூலம் மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம்

---

**5.** திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்று எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. புதியதாக கொரோனா தொற்றுக்கு ஆளாகிய நோயாளிகளை பரிசோதித்து உடல் நிலை, நோயின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தி சாதாரண பாதிப்பு இருந்தால் வீட்டில தனிமைப்படுத்தவும், மிதமான பாதிப்பு இருந்தால் கொரோனா கேர் சென்டர்களிலும், அதிக பாதிப்பு இருந்தால் மருத்துவமனையில் வைத்து சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு

அருகில் உள்ள நூற்றாண்டு நினைவு மாநகராட்சி துவக்கப் பள்ளியினை கொரோனா வகைப்படுத்தும் மையம் துவங்குவதற்கு தயார் நிலையில் வைத்திருக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி நூற்றாண்டு நினைவு மாநகராட்சி துவக்கப் பள்ளிக்கு கூடுதல் கழிவறை வசதி, தண்ணீர் வசதி மற்றும் மின் சாதனப் பொருட்கள் பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/- ஆகும். இப் பணியினை, திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.ஸ்ரீதரன், ஒப்பந்ததாரர் திண்டுக்கல் அவர்களின் மூலம் மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (**ந.க.எண். 8009 / 2021 / இ 4**)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்
2) இப் பணி கொரோனா தடுப்புப் பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும் இப் பணிக்கான செலவுத் தொகை ரூ.2,00,000/- னை மாநகராட்சி கல்வி நிதியிலிருந்து திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.ஸ்ரீதரன், ஒப்பந்ததாரர், திண்டுக்கல் மூலம் மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம்.

---

**6.** திண்டுக்கல் மாநகராட்சியின் பிரதான குடிநீர் ஆதாரமான ஆத்தூர் காமராஜர் சாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 10 திறந்தவெளி கிணறுகளில் ஒவ்வொரு கிணற்றுக்கும் இரு எண்ணம் வீதம் 20 எண்ணம் நீர் மூழ்கி இறைப்பான்கள் உள்ளன. இவற்றில் தற்போது 9 எண்ணம் 7.50 குதிரைத் திறன் கொண்ட நீர் மூழ்கி இறைப்பான்கள் மற்றும் 1 எண்ணம் 5.00 குதிரைத் திறன் கொண்ட நீர் மூழ்கி இறைப்பான் ஆக மொத்தம் 10 எண்ணம் நீர் மூழ்கி இறைப்பான்கள் பழுதடைந்துள்ளது. இவ் அனைத்து நீர் மூழ்கி இறைப்பான்களில் Rewinding உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.95,000/- ஆகும். இப் பணியினை, திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள A.P. Electrical & Rewinding works, Dindigul மூலம் மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (**ந.க.எண்.2144 / 2021 / இ 3**)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்
2) இப் பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கான செலவுத் தொகை ரூ.95,000/- னை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள A.P. Electrical & Rewinding works, Dindigul மூலம் மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம்.

---

**7.** திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு கீழ்க்கண்ட விவரக் குறிப்புகள் கொண்ட மடிக் கணினி வாங்கும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/- ஆகும்.

"DELL INSPIRON 5406 LAPTOP (INTEL L5 11th GEN / 8 GB RAM / 512 GB M.2 CARD / 14" FHD SCREEN / MULTI TOUCH / WIN 10 / MS- OFFICE / FPR / BACKLIT / ELL ACTIVE PEN / BACK BAG"

இப் பணியினை, திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள AKIRA COMPUTERS, DINDIGUL மூலம் மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (**ந.க.எண்.2144 / 2021 / இ 3**)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்
2) இப் பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கான செலவுத் தொகை ரூ.1,00,000/- னை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள AKIRA COMPUTERS, DINDIGUL மூலம் மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம்.

---

**8.** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று கண்டறியப்படும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் வார்டு பகுதிகளில் உள்ள வீடுகளில், தெருவில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட கொரோனா தொற்று உண்டாகும் நபர்கள் இருக்குமாயின் அப்பகுதிகளில் உடனடியாக இரும்பு தகர டின் ஷீட் கொண்டு அப்பகுதியில் தடுப்பு உண்டாக்கி தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்க மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க கொரோனா தொற்று பாதிக்கப்பட்ட பகுதிகளில் வைரஸ் பரவாமல் தடுக்கும் பொருட்டு வாடகை அடிப்படையில் தகரத்திலான தடுப்புகள் அமைக்கும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/- ஆகும். இப் பணியினை, திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.வேல்முருகன், பந்தல் காண்ட்ராக்டர் அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல் அவர்களின் மூலம் மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (**ந.க.எண். 8009 / 2021 / இ 4**)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்
2) இப் பணி கொரோனா தடுப்புப் பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும் இப் பணிக்கான செலவுத் தொகை ரூ.1,00,000/- னை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.வேல்முருகன், பந்தல் காண்ட்ராக்டர் அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல் மூலம் மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம்.

---

**9.** திண்டுக்கல் மாவட்டத்தில் ஆர்.எம். காலனியில் மின் மயானமும், வேடபட்டியில் எரிவாயு தகன மேடையும் இயங்கி வருகின்றது. இவ்விரு மையங்களும் தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. நாடு முழுவதும் கொரோனா வைரஸ் தீவிரமாக பரவி வரும் சூழ்நிலையில், தினசரி இறப்பு விகிதமும் அதிகரித்து வருகின்றது. அவ்வாறு இறந்த உடல்களை எரியூட்டும் நேரம் வரையில் பாதுகாப்பான முறையில் குளிரூட்டி வைப்பதற்கு (Dead Body Mobile Freezer Box) போதுமான குளிரூட்டும் பெட்டிகள் இல்லை. எனவே இறந்த உடல் குளிரூட்டும் பெட்டி (Dead Body Mobile Freezer Box) - 4 எண்ணம் வாங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/- ஆகும். இப் பணியினை, திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள மெசர்ஸ். ரியல் டெக் இன்ஜினியரிங், கோயம்புத்தூர் அவர்களின் மூலம் மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(**ந.க.எண். 8009 / 2021 / இ 4**)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்
2) இப் பணி கொரோனா தடுப்புப் பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும் இப் பணிக்கான செலவுத் தொகை ரூ.3,00,000/- னை COVID 19 – மாநில பேரிடர் மேலாண்மை 2021-22 நிதியிலிருந்து திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள மெசர்ஸ். ரியல் டெக் இன்ஜினியரிங்,, கோயம்புத்தூர் மூலம் மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம்

---

**10.** திண்டுக்கல் மாநகராட்சியின் முன்னாள் செயற் பொறியாளர் (தற்போது ஓய்வு) திரு.அ.சேது ரவந்த் என்பவருக்கு காலதாமதமாக வழங்கப்பட்ட பணிக் கொடைத் தொகை ரூ.9,79,061/-க்கு 1.1.2013 முதல் 19.11.2019 வரையிலான காலத்திற்குரிய வட்டித் தொகை ரூ.5,40,438/- வழங்கிட அனுமதிக்கப்பட்ட அரசாணை (ப) எண். 79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( ந ப 3) துறை, நாள் 22.2.2021 மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(**ந.க.எண். 5089 / 2014 / பி 2**)

**அலுவலக குறிப்பு**

1) மாமன்றம் பதிவு செய்திடலாம்
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 15356 / 2019/ எப் 1 – 1, நாள் 26.3.2021 ல் மேற்படி வட்டித் தொகையினை திண்டுக்கல் மாநகராட்சி நிதியிலிருந்து தனியருக்கு வழங்கிட திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு அனுமதியளித்து ஆணையிடப்பட்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம்

**11.** திண்டுக்கல் மாநகராட்சியில் அலுவலக கணினி அறை பயன்பாட்டில் உள்ள UPS ல், 16 பேட்டரிகள் பழுதாகி உள்ளதால் வைஷ 16 பேட்டரிகளை புதியதாக வாங்கும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.1,20,000/- க்கு அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசர அவசியம் கருதி இப் பணியை திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் பிரிவு.15 ன் கீழ் மேற்கொள்ள 23.4.2021 இல் கீழ்க்காணுமாறு விலைப்புள்ளி பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | தன்வின் பேட்டரிஸ் | ரூ.1,10,000/- |
| 2 | ஹரி டிரேடர்ஸ் | ரூ.1,15,680/- |
| 3 | வேலன் பேட்டரிஸ் | ரூ.1,18,400/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள தன்வின் பேட்டரிஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கவும், வேலை உத்திரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண். 2543 / 2021 / இ 3)**

**அ.குறிப்பு**

1) மாமன்றம் பதிவு வழங்கலாம்
2) வருவாய் நிதி 2021-22ன் கீழ் பணியினை மேற்கொள்ளலாம்.

---

**12.** திண்டுக்கல் மாநகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்காக அகண்ட அலை வரிசை இணைப்பு பெறப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக இணைப்பு பெறுவதற்கும், மாநகராட்சிப் பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்கள் குறைகளை மாநகராட்சிக்கு Whats app மூலம் தெரிவிப்பதற்கு ஏதுவாக ஒரு எண்ணம் அலைபேசி மற்றும் அதற்குரிய இணைய இணைப்பு பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.25000/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசர அவசியம் கருதி இப் பணியை திண்டுக்கல் மாநகராட்சி சட்டம் பிரிவு.15 ன் கீழ் மேற்கொள்ள 23.4.2021 இல் கீழ்க்காணுமாறு விலைப்புள்ளி பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | திண்டுக்கல் மாவட்ட எழுது பொருட்கள் தயாரிக்கும் மற்றும் தையல் மகளிர் மேம்பாட்டு தொழிற் கூட்டுறவு சங்கம், டபிள்யூ.88 | ரூ.19942/- |
| 2 | கார்த்திக் மொபைல்ஸ் | ரூ.21004/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திண்டுக்கல் மாவட்ட எழுது பொருட்கள் தயாரிக்கும் மற்றும் தையல் மகளிர் மேம்பாட்டு தொழிற் கூட்டுறவு சங்கம், டபிள்யூ.88 நிறுவனத்திற்கு பணியினை வழங்க வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(**ந.க.எண். 2543 / 2021 / இ 3)**

**<u>அ.குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) வருவாய் நிதி 2021-22 ன் கீழ் பணியினை மேற்கொள்ளலாம்.

---

**13.**திண்டுக்கல் மாநகராட்சி ஆத்தூர் காமராஜர் சாகர் குடிநீர்த்தேக்கத்திற்கு குடிநீர் பயன்பாட்டிற்காக 10 மெ.டன் ஆலம் சப்ளை செய்வதற்கு குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி 25.2.2021 இல் நடைபெற்றது. அவற்றில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர்.

1) ஸ்ரீ சத்யா டைஸ் அண்ட் கெமிக்கல்ஸ் 1 kg - ரூ.12.50

2) பியூப்பிள் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் 1 kg - ரூ.14.00

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரூ.12.50 அளித்துள்ள ஸ்ரீ சத்யா டைஸ் அண்ட் கெமிக்கல்ஸ் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. (**ந.க.எண்.3397 / 2019/ இ 3)**

**<u>அ.குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்

2)பணிக்கான செலவினத்தை 2021-22 குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம். அவசர அவசியத்தை முன்னிட்டும், குடிநீர் விநியோக நலன் கருதியும், குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்

---

**14.** திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் பயன்பாட்டு வாகனம் டி.என்.57.பிசி.1777 இதுவரை 1,24,000 கி.மீ இயக்கப்பட்டுள்ளதால் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள மகேந்திரா ஜீப் டீலர் ஆன (Service) Automotive Manufactures Pvt Ltd, மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளி ரூ.45307/- க்கு பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட Automotive Manufactures Pvt Ltd, மதுரை நிறுவனம் அங்கீகாரம் பெற்ற பணி மனை ஆகும். எனவே மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் டி.என்.57.பிசி.1777 வாகனத்தை பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(**ந.க.எண். 3614 / 2021 / இ 3).**

**<u>அ.குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) வருவாய் நிதி 2020-21 ன் கீழ் பணியினை மேற்கொள்ளலாம்.

---

**15.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான கோவிந்தாபுரம் மின் மயானம் மற்றும் வேடபட்டி எரிவாயு மயானம் பராமரிப்பு **திண்டுக்கல் கோவிந்தாபுரம் மின் மயான அறக்கட்டளைக்கு** வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பொதுமக்கள் பலர் கொரோனா பெருந்தொற்று காரணமாக மருத்துவமனைகளில் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டும், சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தி வருகின்றனர். இவ்வாறு இயற்கை எய்தும் நபர்களின் சடலங்கள் அரசு / தனியார் மருத்துவமனைகள் மற்றும் இருப்பிடங்களிலிருந்து நேரடியாக மின் மயானத்திற்கு எரியூட்டுவதற்காக பெறப்படுகிறது.

மேற்படி சடலங்களை எரியூட்டும் சமயம் **உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி** பொது சுகாதாரம் நலன் கருதியும், கொரோனா தொற்று இதர நபர்களுக்கு பரவாத வகையிலும் சடலங்கள் எரியூட்டும் சமயம் குறைந்த நபர்கள் மட்டுமே மயானத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றனர். இந்நிலையில், மேற்படி அரசு / தனியார் மருத்துவமனை களிலிருந்தும் தனியார் இல்லங்களிலிருந்தும் பெறப்படும் சடலங்களுக்கும் உடன் வரும் நபர்களிடம் எரியூட்டு கட்டணம் பெறுவதில் மிகுந்த இடர்பாடுகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த மன உளைச்சலுக்குள்ளாகும் நிலை ஏற்படுவதுடன் பொது மக்களிடத்து இம்மாநகராட்சிக்கு அவப்பெயரும் ஏற்படுகிறது.

இதனை தவிர்த்திட மாவட்ட ஆட்சியரகத்தில் மாண்புமிகு கூட்டுறவு துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், உரிய அறிவுரைகள் இம்மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, கொரோனா தொற்று காரணமாக பாதிப்புக்குள்ளாகி இயற்கை எய்தும் நபர்களின் சடலங்களை எரியூட்டிட **(இயற்கை / விபத்து மரணங்கள் தவிர்த்து)** இம்மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட எரியூட்டு கட்டணம் ரூ.500/—ஐ கோவிந்தாபுரம் மின் மயானம் அறக்கட்டளை வசூல் செய்வதிலிருந்து விலக்களித்தும், மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.4642 / 2002 /எச்3).**

<u>அலுவலக குறிப்பு</u>

அரசாணை எண்.122 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 27.06.2008ல் பிற்சேர்க்கை வரிசை எண்.10ல் எரியூட்டப்படும் சடலத்திற்கான கட்டணத்தில் தனியார் / அறக்கட்டளை நிறுவனம் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய பங்கு தொகையினை செலுத்த வேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதற் கிணங்க, மேற்படி மின்மயானத்தில் பணிபுரியும் பணியாளர்களின் பணியமைப்பு செலவினம், பராமரிப்பு மற்றும் இம்மாநகராட்சியால் செலுத்தப்படும் மின் கட்டணத்தினை கருத்தில் கொண்டும், முதற்கட்டமாக நிர்வாக நலன் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் **கொரோனா தொற்று காரணமாக பாதிப்புக்குள்ளாகி இயற்கை எய்தும் நபர்களின் சடலங்களை எரியூட்டிட (இயற்கை / விபத்து மரணங்கள் தவிர்த்து)** இம்மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட எரியூட்டு கட்டணம் ரூ.500/—ஐ கோவிந்தாபுரம் மின் மயானம் அறக்கட்டளை வசூல் செய்வதிலிருந்து விலக்களித்தும், கட்டணமின்றி எரியூட்டவும் உத்திரவிட அனுமதிக்கலாம்.

---

**16.** இம்மாநகராட்சிக்குட்பட்ட கோவிந்தாபுரம் மின் மயானம், வேடபட்டி எரிவாயு மயானம் மற்றும் 5 இடங்களில் சாதாரண வகை மயானமும் செயல்பட்டு வருகிறது. தற்பொழுது நாடு முழுவதும் கொரோனா தொற்று காரணமாக தினசரி இறப்பு விகிதம் அதிகரித்ததன் காரணமாக இறந்த உடல்களை உடனடியாக தகனம் செய்வதில் கால தாமதம் ஏற்படுகிறது.

மேலும், கொரோன தொற்று சடலங்களை முன்னுரிமை அளித்து காலை முதல் இரவு 9 மணி வரை எரியூட்டப்பட்டு வரப்பெறினும், அதிகளவில் சடலங்கள் பெறப்படுவதால், மேற்கண்ட மயானங்களில் கொரோனா மற்றும் இதர காரணங்களால் இறந்த உடல்களை நள்ளிரவுக்கு மேல் எரியூட்டுவதில் இடர்பாடுகள் ஏற்படுவதுடன் மயானங்களை பராமரிப்பு செய்வதிலும் இடையூறுகள் ஏற்படுகிறது.

மேலும், திறந்த வெளிகளில் சடலங்களை கையாளுவதால் இதர நபர்களுக்கு தொற்றுகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாலும், இதர இடர்பாடுகளை கருத்தில் கொண்டும், பொதுமக்களிடத்தில் இம்மாநகராட்சிக்கு ஏற்படும் கண்டனங்களை

தவிர்த்திடும் வகையிலும், இறந்த உடல்களை முறையாக எரியூட்டும் வரை பாதுகாப்பான முறையில் குளிரூட்டி பெட்டிகளில் வைத்து பராமரித்து இறுதி சடங்குகளை மேற்கொள்ள இம்மாநகராட்சியால் 4 எண்ணம் இறந்த உடல் குளிரூட்டும் பெட்டி (Dead Body Mobile Freezer Box) கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட குளிரூட்டும் பெட்டிகளை தேவைப்படும் பொதுமக்கள் கோவிந்தாபுரம் மின் மயான அறக்கட்டளைக்கு முறையாக தகவல் தெரிவித்து, முற்றிலும் இலவசமாக வாடகை ஏதும் இல்லாமல் மீளப் பெறக்கூடிய காப்பு தொகை ரூ.3000/—ஐ செலுத்தி சொந்த வாகனங்களில் எடுத்துச் சென்று சடலத்தினை மயானங்களில் எரியூட்டிய பிறகு மீளவும் கோவிந்தாபுரம் மின் மயான அறக்கட்டளையில் ஒப்படைத்து, காப்பு தொகையினை திரும்ப பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**(ந.க.எண்.4642 / 2002 /எச்3).**

**அலுவலகக் குறிப்பு..**

அனுமதிக்கலாம்.

---

**17.** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு நகரமைப்பு பிரிவு பயன்பாட்டு வாகனம் TN.57.AM.7778 க்கு டயர்கள் பொருத்தப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டபடியால் புதியதாக 4 டயர்கள் மற்றும் டியூப்கள் வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.27000/- ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(**ந.க.எண். 2920 / 2021/ இ 3)**

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**18.** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு ஈப்பு வாகனம் TN.57.BC.3740 க்கு டயர்கள் பொருத்தப்பட்டு 3 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டபடியால் புதியதாக 4 டயர்கள் மற்றும் டியூப்கள் வாங்கி பொருத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.27000/- ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண். 3243 / 2021/ இ 3)**

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**19.** அரசாணை எண்.36 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.1) துறை நாள் 19.04.2021ல் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயமுத்தூருக்கு வருடாந்திர பங்கு தொகையாக திண்டுக்கல் மாநகராட்சி 01.04.2021 முதல் வருடத்திற்கு ரூ.3.00 லட்சம் செலுத்த வேண்டுமென உத்திரவிடப்பட்டு, வரப்பெற்ற அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

மேலும், 2021-22 வருடத்திற்கான வருடாந்திர நிர்வாக பங்குத் தொகை ரூ.3.00 லட்சத்தினை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயமுத்தூருக்கு செலுத்திட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(**ந.க.எண். 1143 / 2019/ சி1)**

**<u>அ.குறிப்பு</u>**

1) அரசாணையினை மாமன்றம் பதிவு செய்யலாம்.
2) வருடாந்திர நிர்வாக பங்குத் தொகை ரூ.3.00 லட்சத்தினை செலுத்திட மாமன்றம் அனுமதிக்கலாம்.
3) செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலுத்திடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்

---

**20.** திண்டுக்கல் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத்திட்டம் சிப்பம் I, II மற்றும் III என பிரிக்கப்பட்டு மொத்தமுள்ள 48 வார்டுகளில் 19 வார்டுகளில் முழுமையாகவும் 7 வார்டுகள் பகுதியாகவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதில் சிப்பம் I, மற்றும் III ற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் தனியர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது சிப்பம் II லும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. எனவே சிப்பம் II ற்கான இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை இரு வருட காலத்திற்கு தமிழ்நாடு பொதுப் பணித்துறை 2020-21 விலை விகிதத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.45.15 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட தொகைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(**ந.க.எண்.3845 / 2021/ இ 4)**

**<u>அ.குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) குடிநீர் நிதி 2021-22 ன் கீழ் பணியினை மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

**21.** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட திருச்சி ரோடு – ஆர்.எம். காலனி ரவுண்டானா மற்றும் அரசு மருத்துவமனை அருகில் அமைந்துள்ள உயர் கோபுர மின் விளக்குகள் பழுதாகி அடிக்கடி மின் விளக்குகள் எரியாத நிலையில் உள்ளது. மேற்காணும் இடம் பிரதான சாலையாக இருப்பதால் உயர் கோபுர மின் விளக்குகள் ஒவ்வொன்றிலும் 8 எண்ணம் கொண்ட 200 W Flood Lilght பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண். 3829/ 2021/ இ 3)**

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) பணியின் அவசர அவசியம் கருதி வருவாய் நிதி 2021-22 ன் கீழ் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**22.**திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான ஆத்தூர் காமராஜர் நீர்த் தேக்க வளாகத்தில் அமைந்துள்ள இரண்டு குடிநீர் திட்ட சுத்திகரிப்பு நிலையங்கள், இரண்டு நீரேற்று நிலையங்கள், 10 எண்ணம் திறந்தவெளி கிணறுகள், 10 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் மற்றும் காவலர் பணி ஆகிய பணிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப பணியாளர்கள், மற்றும் மலைக்கோட்டை நீருந்து நிலைய மோட்டார் பம்ப்செட்கள் இயக்கத் தேவையான தொழில்நுட்ப பணியாளர்களுக்கான 2020-21 ம் ஆண்டிற்கான அனுமதிக்கப்பட்ட பணிக்காலம் முடிவடைவதால் 2021-2022 ம் ஆண்டிற்கு வெளி முகமை மூலம் மின் பணியாளர்கள், பில்டர் பெட் ஆபரேட்டர்கள், நிலைய பராமரிப்பு உதவியாளர்கள், Turn Cock, காவலர்கள் ஆகிய பணியாளர்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தரப்படுத்தப்பட்ட விலை விகிதம் 2021-22ன்படி நியமிக்கும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.49.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண்.3955/ 2021/ இ 4)**

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) குடிநீர் நிதி 2021-22 ன் கீழ் பணியினை மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

**23.** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட ஹனுமந்தநகர் இரயில்வே மேம்பாலம் கீழே அமைந்துள்ள பாதாள சாக்கடை குழாய் மற்றும் ஆய்வு குழிகளை மாற்றியமைக்க நெடுஞ்சாலைத் துறையுடன் கூட்டுப்புலத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டதில் இடத்தினை மாற்றியமைக்க ரூ. 5.00 இலட்சத்திற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதன்படி, உதவி கோட்டப்பொறியாளர், நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் மதுரை, அவர்கள் இடம் மாற்றி அமைப்பதற்குரிய தொகை செலுத்த இவ்வலுவலக 27.01.2021 –ம் தேதிய கடிதத்தில் உதவி கோட்ட பொறியாளர் நபார்டு மற்றும் கிராமச்சாலைகள், மதுரை அவர்களை கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி, உதவி கோட்டப்பொறியாளர் அவர்கள் ரூ. 5.00 இலட்சத்திற்கான பாரத மாநில வங்கி வரைவோலை எண். 544790, நாள். 16.02.2021 (பாரத மாநில வங்கி) மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட கழிவுநீர் குழாய்கனை மாற்றி அமைத்து தருவதற்கு ரூ. 5.00 இலட்சத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளதற்கும் மற்றும்

ஒப்பந்தபுள்ளி கோரவும். ஒப்பந்தபுள்ளி பெற்று பணியினை முடித்து தருவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 4721/2020/இ4 (பா.ச.தி))**

<u>அலுவலக குறிப்பு..</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**24.** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட ஆர்.எஸ். ரோட்டில் அமைந்துள்ள சிப்பம் – I க்குட்பட்ட வார்டு எண்.19-ல் உள்ள பாதாள சாக்கடை பிரதான குழாய் (R.C.C. 200 mm) சேதமடைந்துள்ளதால், அப்பகுதியில் உள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளுக்குள் கழிவுநீர் வெளியே செல்வதால் மிகுந்த துர்நாற்றம் ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமலிருக்க புதிய கழிவுநீர் பிரதான குழாய் (R.C.C 200 mm) அமைக்க ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்கண்ட பணிக்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**(ந.க.எண். 3994/2021/இ4(பா.சா.தி))**

**அலுவலக குறிப்பு..**

மாமன்றம் அனுமதிக்கலாம்..

---

**25.** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் போதிய நிரந்தர ஓட்டுநர்கள் இல்லாத காரணத்தினால், **19** வாகனங்களை இயக்குவதற்கு வெளி முகமை மூலம் ஒப்பந்த ஓட்டுநர்களை **6** மாத காலத்திற்கு விநியோகம் செய்யும் பணிக்கு, கடந்த **09.03.2021** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டும், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டும், சட்டமன்ற பொது தேர்தல் **2021** நன்னடத்தை விதிகள் நடைமுறையில் இருந்த காரணத்தினால் மேற்கண்ட தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமலும், தேர்தல் நன்னடத்தை விதிகள் கடந்த **02.05.2021** உடன் நிறைவடைந்ததை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு அதன் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனம் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை விவரம் | |
|---|---|---|---|
| 1 | திருவா.ராம் நிவாஸ் ஏஜென்ஸி, 16-A1 SS காம்ப்ளக்ஸ், ஆர்.எம்.டி.சி பஸ் டெப்போ எதிரில், நத்தம் சாலை, திண்டுக்கல். | 1 நபருக்கு / 1 நாளுக்கு கூலி | 573.00 |
| | | 19 நபர்களுக்கு / 1 நாளுக்கு கூலி<br>PF, ESIns 16%<br>நிர்வாக கட்டணம் 4% | 10887 .00<br>1742.00<br>435.00 |
| | | **மொத்தம்** | **13064.00** |
| 2 | ஸ்கை மேன் பவர் ஏஜென்ஸி, 53–ஏ ஏ.எம்.சி ரோடு, திண்டுக்கல். | 1 நபருக்கு / 1 நாளுக்கு கூலி | 600.00 |
| | | 19 நபர்களுக்கு / 1 நாளுக்கு கூலி<br>PF, ESIns 15%<br>நிர்வாக கட்டணம் 5% | 11400 .00<br>1710.00<br>570.00 |
| | | **மொத்தம்** | **13680.00** |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் திருவா.ராம் நிவாஸ் ஏஜென்ஸி, திண்டுக்கல் நிறுவனம் குறைந்த பட்ச விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது. எனவே, மேற்கண்ட நிறுவன ஒப்பந்த புள்ளியினை ஏற்பது குறித்து அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 1320/2019/எச்1)**

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) குறைந்த விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழஙகியுள்ள திருவா.ராம் நிவாஸ் ஏஜென்ஸி, திண்டுக்கல் நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) 19 பொது சுகாதாரப் பிரிவு வாகனஙகள் தவிர பாதாளச் சாக்கடை திட்ட பிரிவிற்கு 2 ஓட்டுநர்களை வெளி முகமை மூலம் வழஙகிட பொறியியல் பிரிவில் கடந்த 20.04.2021ம் தேதிய குறிப்பில் பொது சுகாதார பிரிவை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதால், மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் கோரிய 19 ஓட்டுநர்களுக்கு பதிலாக கூடுதலாக இரண்டு ஓட்டுநர்கள் சேர்த்து 21 ஓட்டுநர்களாக விநியோகம் செய்திடவும், 6 மாத காலத்திற்கு அதற்காகும் கூடுதல் உத்தேச செலவினம் ரூ. 2.50 இலட்சத்திற்கும் மாமன்றம் அனுமதி வழஙகலாம்.

---

**26.**திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா தொற்று கண்டறியப்படும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் வார்டு பகுதிகளில் உள்ள வீடுகளில், தெருவில் 3 அல்லது அதற்கு மேற்பட்ட கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர்கள் வசிக்கும் பகுதிகளில் உடனடியாக இரும்பு தகர டின் ஷீட் கொண்டு அப்பகுதியில் தடுப்பு உண்டாக்கி தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்க மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க ரூ.1,00,000/- மதிப்பீட்டில் வாடகை அடிப்படையில் தகரத்திலான தடுப்புகள் அமைக்கும் பணிக்கு 8.4.2021 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. தற்பொழுது திண்டுக்கல் மாநகராட்சிப் பகுதியில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் , அப்பகுதிகளில் இரும்பு தகர டின் ஷீட் கொண்டு தடுப்பு உண்டாக்கி தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட வேண்டியுள்ளதாலும் ஷை பணி மேற்கொள்ள கூடுதலாக தயார் செய்யப்பட்ட உத்தேச செலவினம் ரூ.4,00,000/- க்கு ஒப்புதல் வேண்டப்படுகிறது. மேலும் இப் பணியினை, திண்டுக்கல் மாநகராட்சி சட்டப் பிரிவு.15 ன் கீழ் குறைவான விலைப்புள்ளி அளித்து ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் வேல்முருகன் பந்தல் காண்ட்ராக்டர் அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல் அவர்களின் மூலம் மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.(**ந.க.எண். 8009/2021/இ 4**)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் பதிவு செய்யலாம்
2) இப் பணிக்கான செலவுத் தொகை ரூ.4,00,000/- னை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், COVID 19 – மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் கீழ் திண்டுக்கல் மாநகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படின் அத் திட்ட நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்
3) இப் பணி கொரோனா தடுப்புப் பணி என்பதாலும், அவசர அவசியம் கருதி போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணி என்பதாலும், மீண்டும் விலைப்புள்ளி கோருவதனால் ஏற்படும் கால தாமதத்தை கருத்தில் கொண்டும் ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் வேல்முருகன் பந்தல் காண்ட்ராக்டர் அண்ட் டெக்கரேட்டர், திண்டுக்கல் அவர்களின் மூலம் பணி மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம்.

---

**27.** வழக்கு திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு ராமநாதபுரம் செட்டிநாயக்கன்பட்டியில் உள்ள வார்டு எண்.2, பிளாக் எண்.27, நகரளவு எண். 19-ல் உள்ள நிலத்திற்கு பட்டா வழங்க கோரி மாநகராட்சி ஆணையாரை 4-ம் பிரதிவாதியாக சேர்த்து கீழ்க்கண்ட நபர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு ஒன்றிற்கு ரூ. 3,000/- விதம் 6 வழக்குக்கு ரூ. 18,000/- வழங்கவும் கீழ்க்கண்ட வழக்குகளுக்கு மாநகராட்சி சார்பாக திரு. லாரன்ஸ் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வழக்காட மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்பட்டது.

1) திரு. மாரிமுத்து, த/பெ. நல்லதம்பி - வழக்கு எண். W.P.(MD). 8429/2021
2) திரு. எஸ். விஜயகுமார், த/பெ. சேட் -வழக்கு எண். W.P.(MD). 8428/2021
3) திரு. கோபால், த/பெ. சின்னசாமி - வழக்கு எண். W.P.(MD). 8430/2021
4) திரு. பன்னீர் செல்வம், த/பெ. முத்துராஜ்-வழக்கு எண்.W.P.(MD).8431/2021
5) திரு.கணேசன், த/பெ. பழனிச்சாமி - வழக்கு எண். W.P.(MD). 8432/2021
6) திரு.சி. நாகராஜ், த/பெ. சின்னச்சாமி - வழக்கு எண். W.P.(MD). 8426/2021

**(ந.க.எண். 3551/2021/எப்3)**

**<u>அலுவலக குறிப்பு..</u>**

1. வழக்கறிஞர் திரு. ஜே. லாரன்ஸ் அவர்கள் வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்த மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்கண்ட 6 வழக்கிற்கு உத்தேச கட்டணமாக ரூ.18,000/- வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**28.** திண்டுக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர், அவர்களின் கடிதம் ந.க.எண். 11589 / 2020/ அ 8, நாள் 13.2.2021 இல் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 இன் போது மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் சிரமமின்றி வாக்குச் சாவடிகளுக்கு சென்று வாக்களிக்க திண்டுக்கல் மாநகராட்சி 65 எண்ணம் சக்கர நாற்காலிகள் புதியதாக வாங்குவதற்கு அறிவுறுத்தியுள்ளார்கள். மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலன் பொறுப்பு அலுவலர், மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 857 / 2020, நாள் 19.2.2021 இல் சக்கர நாற்காலிகளை அந்தந்த துறை நிதியில் மத்திய அரசின் நிறுவனமான அலிம்கோ (Artificial Limbs Manufacturing Corporation of India (ALIMCO), Banglore) நிறுவனத்திடம் கொள்முதல் செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அலிம்கோ நிறுவனத்தின் 2.3.2021 ஆம் தேதிய விலை விபரப் பட்டியலில் 65 எண்ணம் சக்கர நாற்காலிகள் வாங்குவதற்கு ரூ.4,81,000/- (IGST உட்பட) 100 சதவீத முன்பணம் செலுத்தி பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவுத் தொகை ரூ.4,81,000/- ஐ மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், 65 எண்ணம் சக்கர நாற்காலிகளை மத்திய அரசின் நிறுவனமான அலிம்கோ நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.1583 / 2021/ சி 6)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ளலாம்,
3. தேர்தல் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி, மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.